குணநலன்களை வளர்க்காத கல்வி பயனற்றது

ராஜ்நாத் சிங்

உத்தர பிரதேச மாநிலம் லக்னௌவில் உள்ள பாபாசாகேப் பீம்ராவ் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவிக்குச் சான்றிதழ் வழங்கிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்.

லக்னௌ, ஆக. 29: குண நலன்களை வளர்க்காமல் வெறுமனே பட்டங்களை மட்டுமே வழங்கும் கல்வி பயனற்றதும், முழுமை இல்லாததும் ஆகும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

இது தொடர்பாக உத்தர பிரதேச மாநிலம், லக்னௌவில் உள்ள பாபா சாகேப் பீம்ராவ் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற 11-ஆவது பட்டமளிப்பு விழாவில் அவர் பேசியதாவது:

குண நலன்களை வளர்க்காமல் வெறுமனே பட்டங்களை மட்டுமே வழங்கும் கல்வி பயனற்றதும் முழுமை இல்லாததும் ஆகும். மாணவர்கள் பரந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதுடன் பொறாமையையும் தவிர்க்க வேண்டும். ஒரு மனிதரின் கண்ணோட்டம் விரிவடையும்போதுதான் அவரது மகிழ்ச்சி அதிகரிக்கும். குறுகிய மனப்பான்மை கொண்டவருக்கு தூய மனம் இருக்காது. குறுகிய மனம் படைத்த யாரும் உயர்ந்தவராக உருவெடுக்க முடியாது என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கருத்து தெரிவித்தார்.

அம்பேத்கர் தன் வாழ்வில் பல்வேறு இன்னல்களை சந்தித்தார். பாகுபாடுகளை எதிர்கொண்டபோதிலும் சமூக சீர்திருத்தவாதியான அவர் வன்முறை அல்லது தனது தலைவிதியை நொந்துகொள்வது ஆகியவற்றில் ஈடுபடாமல் கல்வியைத் தேர்ந்தெடுத்தார்.

பள்ளியில் மற்ற குழந்தைகள் குடிநீர் பருகும் குழாயில் குடிநீர் அருந்த அம்பேத்கருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மிகப்பெரிய அநீதி இழைக்கப்பட்டபோதிலும் அவர் அதைக் கருதாமல் கல்விப்பாதையைத் தேர்ந்தெடுத்தார். கல்வி பயில்வதற்கு வெளிநாடு சென்றிருந்த அவர் தாயகம் திரும்பி மக்களுக்கு மாற்றத்துக்கான உத்வேகத்தை அளித்தார்.

இன்று இந்தியாவின் வெற்றி மற்றும் விண்வெளித் திறன்களைக் கண்டு உலகமே வியக்கிறது. எந்த அதிசயத்தாலும் இந்த மாற்றம் நிகழவில்லை; மாறாக இளைஞர்கள், பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பால் தான் இது சாத்தியமானது.

வெற்றிக்கான பயணம் பொதுவாக நான்கு கட்டங்களைக் கொண்டிருக்கும். முதலில் மக்கள் உங்களைக் கண்டுகொள்ள மாட்டார்கள்; அதன்பிறகு உங்களைப் பார்த்து சிரிப்பார்கள்; அதையடுத்து உங்களை எதிர்ப்பார்கள்; இறுதியில் உங்கள் வெற்றியைப் புகழ்வார்கள்.

மாணவர்கள் தங்களுக்கு தடைகளை ஏற்படுத்துவோரைக் கண்டு நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது; அதற்கு பதிலாக வாழ்க்கையில் நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்ல வேண்டும். கடந்த 12 ஆண்டுகளில் நாட்டில் கல்வியின் தரமும், பயனும் மேம்பட்டுள்ளன. அதேவேளையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி உள்கட்டமைப்பு விரிவடைந்துள்ளது.

இளம் இந்தியர்கள் இயற்பியல், கணிதம், உயிரியல் ஒலிம்பியாட் ஆகியவற்றில் பதக்கங்களை வென்று வருகின்றனர். அவர்கள் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களைத் தொடங்கி ஹைட்ரஜன் ரயில்கள் மற்றும் ட்ரோன்கள் போன்ற நம் நாட்டு தொழில்நுட்பங்களை உருவாக்குகின்றனர்.

நாட்டில் காப்புரிமை கோரி பதிவு செய்யப்படும் விஷயங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பொருளாதார வலிமை ஒரு நாட்டை செழிப்பானதாக மாற்றுகிறது. எனினும், கலாசாரம் சார்ந்த நம்பிக்கையே அதை உயர்த்துகிறது. 'வசுதைவ குடும்பகம்' (உலகமே ஒரு குடும்பம்) என்ற தத்துவத்தை இந்தியா பரப்பி வருகிறது.

உலக அளவில் இந்தியாவின் அந்தஸ்து மாறியுள்ளது. கடந்தகாலங்களில் இந்தியா பேசும்போது உலகம் அதை செவிமடுத்துக் கேட்காது. ஆனால் சர்வதேச மன்றங்களில் இன்று இந்தியா பேசும்போது ஒட்டுமொத்த உலகமும் அதை அக்கறையுடன் கேட்கிறது. இன்று நாம் விதிகளை வெறுமனே பின்பற்றுபவர்கள் கிடையாது; மாறாக நாம் விதிமுறைகளை உருவாக்குகிறோம் என்றார் அவர்.

பள்ளி பொதுத் தேர்வில் தோல்வி

பிகாரில் 'ஃபெயில்' என்ற வார்த்தைக்குப் பதில் 'திறன் பயிற்சிக்கு தகுதி பெற்றவர்' எனக் குறிப்பிட முடிவு

பாட்னா, ஆக. 29: 10, 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தோல்வியுறும் மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களில் 'ஃபெயில்' என்ற வார்த்தையைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, 'திறன் பயிற்சிக்குத் தகுதி பெற்றவர்' என்ற சொற்றொடரைக் குறிப்பிட பிகார் மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து மாநில கல்வி அமைச்சர் மித்லேஷ் திவாரி பாட்னாவில் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியதாவது:

10, 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் எதிர்பார்த்த மதிப்பெண்ணை ஒரு மாணவர் பெறாததால், அவரின் திறன் மறைந்துவிடாது. எனவே, பொதுத் தேர்வில் தோல்வியுறும் மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களில் 'ஃபெயில்' என்ற வார்த்தையைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, 'திறன் பயிற்சிக்குத் தகுதி பெற்றவர்' என்ற சொற்றொடரைக் குறிப்பிட மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதற்கேற்ப, விதிகளிலும் மாநில கல்வித் துறை தேவையான திருத்தங்களை மேற்கொள்ளும்.

பிகார் திறந்தநிலை பள்ளி மற்றும் தேர்வுகள் வாரியத்தின் (பிஎஸ்இபி) சார்பில் வழங்கப்படும் தொழில் பயிற்சித் திட்டங்களை பொதுத் தேர்வில் தோல்வியுறும் மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தேவையான அறிவுறுத்தல்கள் பிஎஸ்இபி-க்கு வழங்கப்படும்.

மேலும், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தோல்வியுற்று, துணைத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு மதிப்பெண்ணை மேம்படுத்திக் கொள்ள வசதியாக, ஒரு மாத கால சிறப்புப் பயிற்சி பள்ளிக் கல்வித் துறை சார்பில் அவர்களுக்கு வழங்கப்படும் என்றார்.

'வழக்கமான பாடப் புத்தகம் சார்ந்த கற்றலுக்கு அப்பால் உள்ள செயல்பாடுகளில் மாணவர்களுக்கு அதிக அனுபவத்தை வழங்கும் வகையில் மாநில அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது' என்று பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேர்வு சீர்திருத்த கருத்துகள்: உயர்நிலை பணிக் குழு கோருகிறது

புது தில்லி, ஆக.29: பொதுத் தேர்வுகள் சீர்திருத்தம் தொடர்பாக பொதுமக்கள் உள்பட அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை மத்திய அரசு சார்பில் அண்மையில் அமைக்கப்பட்ட உயர்நிலை பணிக் குழு கோரியுள்ளது.

வலிமையான, பாதுகாப்பான, வெளிப்படைத்தன்மையுடைய, சமத்துவமான மற்றும் எதிர்காலத்துக்கு ஏற்புடைய பொதுத் தேர்வு நடைமுறையை உருவாக்கும் நோக்கில் இன்ஃபோசிஸ் இணை நிறுவனர் நந்தன் நிலேகணி தலைமையிலான இந்த உயர்நிலை பணிக் குழுவை மத்திய அரசு அமைத்து கடந்த ஜூலையில் அறிவிக்கை செய்தது.

இந்தக் குழு சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில், பொதுத் தேர்வுகளில் விரிவான மாற்றங்களை மத்திய அரசு மேற்கொள்ள உள்ளது. அந்த வகையில், பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துகளை உயர்நிலை பணிக் குழு கோரியுள்ளது.

இதுகுறித்து உயர்நிலை பணிக் குழு வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'தேர்வு நடைமுறையை வலுப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, அனைத்துத் தரப்பினரிடமிருந்து அனுபவம், அறிவு மற்றும் கண்ணோட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. எனவே, மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், கல்வி நிறுவனங்கள், தேர்வுகளை நடத்தும் அமைப்புகள், சமூக அமைப்புகள் உள்பட பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. பொதுத் தேர்வுகளை நடத்துவது மற்றும் பாதுகாப்பு, தேர்வின் வடிவம் மற்றும் மதிப்பீடு நடைமுறை, நிர்வாகம், பொறுப்பேற்பு மற்றும் நிறுவன ஏற்பாடுகள், தேர்வு முறைகேடுகளைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் குறைதீர்ப்பு நடைமுறைகள் குறித்து கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்கலாம்.

தேர்வு நடைமுறையில் தொழில்நுட்பப் பயன்பாடு, பாதுகாப்பான கணினிவழித் தேர்வு, தேர்வு மைய உள்கட்டமைப்புகள், தேர்வு நடைமுறை முழுவதும் மாணவர்களின் நலனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கருத்துகளைத் தெரிவிக்கலாம்' என்று தெரிவிக்கப்பட்டது.

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட், ஜேஇஇ முதல் நிலை தேர்வு, கியூட் இளநிலை, முதுநிலை தேர்வுகள் உள்ளிட்டவை தேசிய தேர்வு முகமையால் (என்டிஏ) நடத்தப்படுகின்றன. கடந்த மே 3-ஆம் தேதி நடத்தப்பட்ட நீட் தேர்வு வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது பெரும் சர்ச்சையானது. அதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் 23 லட்சம் பேர் எழுதிய நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டு, கடந்த ஜூன் 21-ஆம் தேதி மறுதேர்வு நடத்தப்பட்டது. தொடர்ந்து, என்டிஏ சார்பில் நடத்தப்பட்ட உதவிப் பேராசிரியர் தகுதி மற்றும் மத்திய அரசின் உதவித் தொகையுடன் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்வதற்கான நெட் (தேசிய அளவிலான தகுதித் தேர்வு) தேர்விலும் குளறுபடிகள் நிகழ்ந்தன.

இதைத் தொடர்ந்து, தேர்வு நடைமுறைகளை வலுப்படுத்தவும், என்டிஏ அமைப்பை மறுசீரமைக்கவும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தின. நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சிகள் இந்தக் கோரிக்கைகளை முன்னிறுத்தி அமளியில் ஈடுபட்டதால், மழைக்கால கூட்டத் தொடர் முடங்கியது.

கரப்பான் பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி) தலைமையில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தில்லியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், மத்திய கல்வி அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான் பதவி விலகினார்.

அதைத் தொடர்ந்து என்டிஏ அமைப்பால் நடத்தப்படும் தேர்வுகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து அரசுக்குப் பரிந்துரைகளை வழங்க நந்தன் நிலேகணி தலைமையில் இந்த உயர்நிலை பணிக் குழுவை மத்திய அரசு அமைத்தது.

இதில், இஸ்ரோ முன்னாள் தலைவர் எஸ்.சோமநாத், புலனாய்வுத் துறை முன்னாள் இயக்குநர் தபன்குமார் டேகா, சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, கல்வித் துறை முன்னாள் செயலர் அனிதா கர்வால், தளவாடங்கள்-நிர்வாகத் துறை நிபுணர் அம்ருத்லால் மீனா ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளனர்.

காங்கிரஸ் தோல்விகளை மக்களிடம் கொண்டுசெல்ல கர்நாடகத்தில் செப்.1 முதல் பாஜக நடைப்பயணம்

பெங்களூரு, ஆக. 29: கர்நாடக காங்கிரஸ் அரசின் தோல்விகளை மக்களிடம் கொண்டு செல்வதற்காக, செப். 1 முதல் ராய்ச்சூரில் இருந்து பெல்லாரி வரை நடைப்பயணம் நடத்த பாஜக திட்டமிட்டுள்ளது.

வால்மீகி பழங்குடியினர் வளர்ச்சிக் கழகத்தில் நிகழ்ந்த முறைகேட்டுக்கு பொறுப்பேற்று அமைச்சர் பி.நாகேந்திராவை ராஜிநாமா செய்யக் கோரி செப். 1-ஆம் தேதி ராய்ச்சூரில் இருந்து பெல்லாரிவரை 10 நாள்களுக்கு நடைப்பயணம் மேற்கொள்ள பாஜக திட்டமிட்டிருந்தது.

இந்நிலையில், பாஜக, மஜத அளித்த நெருக்கடி காரணமாக தனது அமைச்சர் பதவியை பி.நாகேந்திரா வெள்ளிக்கிழமை (ஆக. 28) ராஜிநாமா செய்தார்.

எனினும், ஏற்கெனவே திட்டமிட்டபடி நடைப்பயணத்தை நடத்தப் போவதாக பாஜக அறிவித்திருந்தது. அதன்படி, செப். 1 முதல் 10 வரை கர்நாடக காங்கிரஸ் அரசின் தோல்விகளை மக்களிடம் கொண்டு செல்வதற்காக ராய்ச்சூரில் இருந்து பெல்லாரிவரை நடைப்பயணம் நடத்த பாஜக முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து பாஜக முன்னாள் துணை முதல்வர் ஸ்ரீராமுலு பெங்களூரில் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியது:

அமைச்சர் பதவியை பி.நாகேந்திரா ராஜிநாமா செய்திருந்தாலும், ஏற்கெனவே திட்டமிட்டபடி ராய்ச்சூரில் இருந்து பெல்லாரிவரை செப். 1 முதல் 10-ஆம் தேதிவரை நடைப்பயணம் மேற்கொள்ளப்படும்.

இந்த நடைப்பயணம் செப். 1ஆம் தேதி லிங்கசுகூரில் தொடங்குகிறது. இதை பாஜக மாநிலத் தலைவர் விஜயேந்திரா தொடங்கிவைக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.அசோக், மேலவைத் தலைவர் செலுவாதி நாராயணசாமி, மத்திய அமைச்சர்கள் பிரல்ஹாத் ஜோஷி, ஷோபா கரந்தலஜே, எச்.டி.குமாரசாமி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்த நடைப்பயணம் மஸ்கி, சிந்தனூர், ஹன்சானல் கேம்ப், கனககிரி, கங்காவதி, கம்ப்ளி, சந்தூர், பெல்லாரி ஊரகம் வழியாக பெல்லாரியை அடையும். பொறுப்பேற்ற 25 நாள்களுக்குள் அமைச்சர் பதவியை பி.நாகேந்திரா ராஜிநாமா செய்ததற்கு, சட்டப் பேரவை மற்றும் சட்ட மேலவையில் பாஜக, மஜத நடத்திய போராட்டமே காரணம். பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதால்தான் தனக்கு எதிராகபோராட்டம்நடத்தியதாகபி.நாகேந்திரா கூறியதில் உண்மையில்லை.

வால்மீகி பழங்குடியினர் வளர்ச்சிக் கழகத்தின் கணக்கு கண்காணிப்பாளராக இருந்த சந்திரசேகரன் முறைகேடு குறித்து கேள்வி எழுப்பியதால் அவரை துன்புறுத்தியுள்ளனர். அதன் காரணமாக, சந்திரசேகரன் தற்கொலை செய்துகொண்டதால்தான் இந்த விவகாரம் பகிரங்கமானது.

பி.நாகேந்திராவின் கண்ணீருக்கும், துன்பங்களுக்கும் காங்கிரஸ்தான் காரணமே தவிர, நாங்கள் அல்ல. பழங்குடியினரின் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைமுறைகேடாகபயன்படுத்தியதை எதிர்த்து தான் பாஜக, மஜத போராட்டம் நடத்தியது. இதில் அரசியல் உள்நோக்கம் எதுவும் இல்லை என்றார்.

அமைச்சர் பதவி ராஜிநாமாவால் பி.நாகேந்திரா குற்றம் செய்தவராக அர்த்தமில்லை: காங்கிரஸ்

பெங்களூரு, ஆக. 29: அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்ததால், பி.நாகேந்திரா குற்றம் செய்ததாக அர்த்தமில்லை என காங்கிரஸ் மாநிலத் தலைவர் பி.கே.ஹரிபிரசாத் தெரிவித்தார்.

இது குறித்து பெங்களூரில் அவர் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியது:

அமைச்சர் பதவியில் இருந்து பி.நாகேந்திரா ராஜிநாமா செய்துள்ளதால், வால்மீகி பழங்குடியினர் வளர்ச்சிக் கழகத்தில் நிகழ்ந்த முறைகேட்டுக்கு பொறுப்பேற்றுக் கொண்டதாக அர்த்தம் ஆகாது.

பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒரு தலைவரின் ராஜிநாமாவை தனது அரசியல் வெற்றியாக பாஜக கொண்டாடி மகிழ்கிறது. மக்கள் பிரதிநிதிகளின் கண்ணியத்தைக் காப்பாற்றும் வகையில், அறநெறிகளுக்கு கட்டுப்பட்டு தனது பதவியை நாகேந்திரா ராஜிநாமா செய்தார். இந்த விவகாரத்தில் நாகேந்திரா குற்றம் செய்தாரா என்பதை புலனாய்வு அமைப்புகளும், நீதிமன்றமும்தான் உறுதி செய்ய முடியும்.

பி.கே.ஹரிபிரசாத்

பதவியை ராஜிநாமா செய்ததால், குற்றத்தை ஏற்றுக் கொண்டதாக ஆகாது. பதவியை ராஜிநாமா செய்ததன்மூலம், தனது அரசியல் வாழ்க்கையில் உயர்ந்த பண்பை நாகேந்திரா வெளிப்படுத்தியுள்ளார். நாகேந்திராவின் ராஜிநாமாவை ஒரு விக்கெட் வீழ்ந்துவிட்டதாக பாஜகவினர் கொண்டாடி வருகின்றனர்.

இது என்ன கிரிக்கெட் போட்டியா? முறைகேடு தொடர்பான விசாரணைக்கு நாகேந்திரா முழு ஒத்துழைப்பை அளிப்பார் என்றார்.

பிரிட்டன் குடியுரிமை: இந்தியர்கள் அதிக விண்ணப்பம்

லண்டன், ஆக.29: பிரிட்டனில் நிரந்தர குடியிருப்பு மற்றும் குடியுரிமை கோரி இந்தியர்கள் அதிகமாக விண்ணப்பித்துள்ளதாக அந்த நாட்டு உள்துறை அலுவலகம் வெளியிட்ட தரவுகளில் தெரிவிக்கப்பட்டது.

முறையாக நுழைவு இசைவு (விசா) பெற்று பிரிட்டனில் வசிப்பவர்களுக்கு தற்போது 5 ஆண்டுகளில் நிரந்தர குடியிருப்பு உரிமை வழங்கப்படுகிறது. நிகழாண்டு இறுதியில் இந்த காலஅவகாசம் 10 ஆண்டுகளாக அதிகரிக்கப்படவுள்ளது. பிரிட்டன் குடியுரிமை விண்ணப்பத்தில் முக்கிய அம்சமாக நிரந்தர குடியுரிமை விளங்குகிறது.

இந்நிலையில், பிரிட்டன் உள்துறை அலுவலகம் வெளியிட்ட தரவுகளில், '2026, ஜூன் நிலவரப்படி, 35,384 இந்தியர்களுக்கு நிரந்தர குடியிருப்பு உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 51 சதவீதம் அதிகமாகும்.

2025 முதல் 2026 வரை அதிகப்படியான பிரிட்டன் குடியுரிமை வழங்கப்பட்டவர்களில் 24,851 போருடன் முதலிடத்தில் இந்தியாவும் 18,489 பேருடன் இரண்டாமிடத்தில் பாகிஸ்தானும் உள்ளது.

பட்டப்படிப்பை நிறைவு செய்துவிட்டு பிரிட்டனில் பணியாற்றுவதற்கான நடைமுறையின்கீழ் 64,496 பேருக்கு நுழைவு இசைவு வழங்கப்பட்டுள்ளது. 2026, ஜூன் நிலவரப்படி 85,523 மாணவர் நுழைவு இசைவுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 16 சதவீதம் குறைவாகும். 86,368 மாணவர் நுழைவு இசைவுகளுடன் சீனா முதலிடத்தில் உள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்கள் நிரந்தர குடியிருப்பு உரிமை பெறுவதற்கான காலஅவகாசத்தை 15 ஆண்டுகளாகவும் புலம்பெயர்ந்தவர்கள் வரி செலுத்தும் பலன்களைப் பெறுவதற்கான காலஅவகாசத்தை 20 ஆண்டுகளாகவும் நிர்ணயிக்கும் மசோதாவை பிரிட்டன் நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் ஷபானா மஹ்மூத் தாக்கல் செய்த நிலையில் இந்த தரவுகள் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மும்பையில் மேற்கு ஆஸ்திரேலிய பல்கலைக்கழக வளாகம்

யுஜிசி ஒப்புதல்

மும்பை, ஆக29: மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் சர்வதேச வளாகம் அமைக்க பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) ஒப்புதல் அளித்ததாக மேற்கு ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் தெரிவித்தது.

இதன்மூலம் அடுத்த மாதம் முதல் மாணவர்கள் சேர்க்கை நடத்த மேற்கு ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் தயாராகி வருகிறது.

இதுகுறித்து அந்தப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் டயேன் ஸ்மித்-கேண்டர் கூறியதாவது: மும்பையில் எங்கள் பல்கலைக் கழகத்தை திறப்பது வரலாற்று மைல்கல். இதனால் இந்தியாவுடனான நட்புறவு மேலும் வலுப்படும். மிக முக்கியமாக இந்திய மாணவர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகள் கிடைக்கும் என்றார்.

बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

பேங்க் ஆஃப் பரோடா, அட்டிபிலி கிளை, அட்டிபிலி கிளை – எண். 61, இண்ட்லேபிள் விஃலேஜ், சார்ஜாபுரா ஹோப்ளி சாலை, அட்டிபிலி, பெங்களூரு – 562 107P

மின்னஞ்சல் : vijatti@bankofbaroda.co.in website : www.bankofbaroda.com

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு பிற்ச்சேர்க்கை IV A (பார்க்க – விதி 6 (2) & 8 (6)) க்கான விதி விலக்கு)

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம்' 2002 உடன் படிக்க பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 6(2) & 8(6) க்கான விதி விலக்கு – ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த பேங்க் ஆஃப் பரோடா – வின் அதிகாரப்பூர்வ அலுவலரால் கவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்து, இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கணக்கு/கரிலிருந்து நிலுவைகளை வசூலிக்கும் பொருட்டு, "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்ற வற்றுடன்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ஜாமீன்தாரர்/கள் / ஜாமீன் சொத்து/க்கள் / நிலுவைகள் / அடிப்படை விலை / மின்னணு ஏல தேதி & நேரம், டேவணித்தொகை மற்றும் விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

வ / லாட் எண்.	கடன்தாரர்/கள் / ஜாமீன்தாரர்/கள் / அடமானதாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்தின் சுருக்கமான விபரங்கள் (தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருப்பின் அவற்றுடன்) (உரிமையாளர் / அடமானதாரர் பெயர் : திரு ய ப்ரவீன், த/பெ வேல்)	மொத்த நிலுவைத் தொகை	மின்னணு ஏல தேதி & நேரம்	அடிப்படை விலை, டேவணித்தொகை, விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	கவாதீன நிலை	சொத்து ஆய்வு தேதி & நேரம்
1	1). M/s. க்ளீப்டு ஃபேஷன், முகவரி – தரை தளம், 39/5, JC தொழிற்பேட்டை, கனகபுரா பிரதான சாலை, பெங்களூரு நகரம், கர்னாடகா – 560 062. அதன் பங்குதாரர்கள் திரு T. நாகராஜ், த/பெ திருமூர்த்தி, முகவரி – எண். 18E, ஜீவா தெரு, சிறுபூலுவபட்டி, திருப்பூர், தமிழ்நாடு – 641 603	செட்யூல் A சொத்து – ஆவண எண். 356/2025 என 21.01.2025 அன்று பதிவு செய்யப்பட்டு சொத்துரிமை ஆவண ஒப்படைவு மூலம் ஈட்டுறுதி அடமானம் ஏற்படுத்தப்பட்டு, பிழைதிருத்த ஆவண எண். 812/2025 தேதி – 07.02.2025 ன் படியும் பாத்தியப்பட்ட சொத்து – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார்பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலுக்கா, ராசிபுரம் டவுன், பழைய வார்டு எண். 4, பிறகு வார்டு எண். 7, (தற்போதைய நகராட்சி வரி ரசீது படி வார்டு எண். 5, கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் சாலை எண். 1 – இதில் பழைய சர்வே எண். 210 (புதிய வருவாய் ஆவணத்தின் படி டவுன் சர்வே எண். 71) ல் உள்ள 460 சதுர மீட்டர், கதவு எண். 2, 2A, 2B, 2B/1 (சொத்து வரி படி) மைக்கொண்ட கட்டிடம் உள்ளிட்ட திரு V ப்ரவீன், த/பெ வேல் வயது 24 என்பவரது பெயரில் உள்ள குடியிருப்பு சொத்து மற்றும் அதனுடன் கூடிய அனைத்து இதர உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். எல்லைகளாவன பின்வருமாறு – வடக்கு – கிழமேல் சாலை, தெற்கு – R பெருமாள் மற்றும் பிறர் சொத்து, கிழக்கு – வழக்கறிஞர் சுப்ரமணியன் சொத்து, மேற்கு – MSKA கிருஷ்ணசாமி செட்டியார் சொத்து. அளவீடுகளாவன – கிழமேல் வடக்கு புறம் 15.8 மீட்டர், கிழமேல் தெற்கு புறம் 17.8 மீட்டர், தென்வடல் கிழக்கு புறம் 27.4 மீட்டர், தென்வடல் மேற்கு புறம் 27.4 மீட்டர், என மொத்தம் 460 சதுர அடி மற்றும் அதனுடன் கூடிய ஒரு RCC டெரஸ் கட்டிட வீடு மற்றும் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது தளத்துடன் கதவு எண். 2, வரி விதிப்பு எண். 053/005/900041 மற்றும் கதவு எண். 2A, வரி விதிப்பு எண். 053/005/900042 மற்றும் கதவு எண். 2B, வதி விதிப்பு எண். 053/005/900043 & கதவு எண். 2B/1, வரி விதிப்பு எண். 053/005/900044 மற்றும் மின் இணைப்பு எண். 04–501–002–3082, 04–510–003–3300 மற்றும் தண்ணீர் இணைப்பு எண்கள். 053/005/900313, 053/005/900314 & 053/005/900320. டவுன் சர்வே படி, வார்டு C, ப்ளாக் எண். 2, டவுன் சர்வே எண். 71 ல் அமையப்பெற்ற 0.0460.0 (460 சதுர மீட்டர்) இதன் தீர்வை ரூ 10.00 முழுவதும்.	04.11.2025 ம் தேதியின் படி, ரூ. 5,95,44,839/– (ரூபாய். ஐந்து கோடியே தொன்ணூற்று ஐந்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எட்ணூற்று முப்பத்து ஒன்பது மட்டும்) மற்றும் தொகை செலுத்தும் தேதி வரை மேற்கொண்டு வரும் ஒப்பந்த வீத்த்திலான வட்டி, செலவுகள் மற்றும் இதர கட்டணங்கள்	23.09. 2026 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை	அடிப்படை விலை – ரூ. 6,28,00,000/– டேவணித்தொகை – ரூ 62,80,000/– டேவணித்தொகை பெறுவதன்கான கடைசி தேதி மற்றும் நேரம் – 23.09.2026 பிற்பகல் 02.00 மணி வரை விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை – ரூ. 25,000/–	அடையாள கவாதீனம்	அதிகாரப்பூர்வ அலுவலரின் முன் அனுமதியுடன்
2							
3							

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.in/e–auction மற்றும் https://baanknet.com ல் உள்ள தொடர்பை தயவு கூர்ந்து பார்வையிடவும். சொத்து வரி, மின்னணு க்ஹடா ஏற்படுத்துவதற்கான கட்டணங்கள், சமூக நிர்வாக கட்டணங்கள், மின் இணைப்பு கட்டணம் மற்றும் அனைத்து இதர சட்டபூர்வ கட்டணங்களை அதிகபட்ச விலைகோருபவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், உத்தேசித்துள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அலுவலர், அலைபேசி எண். 8291220220 & மின்னஞ்சல் முகவரி – support.BAANKNET@psballiance.com ல் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 30.08.2026 இடம் : பெங்களூரு

ஒப்பம்– அதிகாரப்பூர்வ அலுவலர், பேங்க் ஆஃப் பரோடா

केनरा बैंक Canara Bank

பிராந்திய அலுவலகம் – பெங்களூரு தெற்கு
முதல் தளம், 19 தென் கோடி சாலை, பசவனகுடி, பெங்களூரு – 560 004
மின்னஞ்சல் : recblrro2@canarabank.com

கோரிக்கை அறிவிப்பு 13(2)

கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கான கோரிக்கை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 ன் பிர